
# அடிப்படை ஆவணங்கள்




புனித அன்னாள் குடும்பம்



புனித அன்னம்மாளே எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.



1769 -1829

அருட்தந்தை ஜாண் போனால் :

இறையன்பை துயர் நீக்கும் பிறரன்பாக வெளிப்படுத்த அருள்வரம் பெற்றவர்.

மனித நேயத்திலும், இறையாண்மையிலும் சிறந்து விளங்கிய அருட்குரு.

பிறர் துன்ப துயரங்கண்டு துவண்டு போனதோடு, துயர் நீக்க வழி வகுத்த மனிதாபிமானி.

புனித அன்னாள் பிறரன்பு சபையின் ஆணிவேர்.

புனித அன்னாள் குடும்பத்திற்கு விதை விதைத்த மாமகான்.



1781 -1853

அன்னை மரிய ரபோல்ஸ்:

இறை அன்பை, இரக்கத்தை, தன் நலம் இல்லா தாயன்பாக தாரை வார்த்த தியாகச் சிற்பி.

இறையாண்மையை வெளிப்படுத்துதலே மனிதனின் மாண்பு என வாழ்ந்து காட்டிய பெண்ணியம்.

அர்ப்பணம் என்றால் நிபந்தனையின்றி பிறர் துயர் துடைக்க தன்னை கைய ளிப்பதில் இறைமகன் இயேசுவின் முகம் மலரக்கண்ட சேவைச் செம்மல்.

புனித அன்னாள் பிறரன்பு சபைக்கு ஆன்மீக பாலூட்டி பிறர்நல சேவையில் செழிக்கச் செய்த ஈடு இணையற்ற தாய்.

## உள்ளடக்கம்


1. முன்னுரை……….
2. அடித்தளம்………
3. புனித அன்னாள் குடும்ப வரையறை…….
4. தனித்துவ பண்புகள்…….
5. உறுப்பினர் பண்புகள்……….
6. பங்கேற்கும் முறைகள்……..
7. அர்ப்பண முறைகள்……….
8. 1. அமைப்புகள்………..
8 .2 பொறுப்புகளை பகிர்தல்…..
8.3 செயல்படும் முறை……….
8.4 தொடர்பு முறைகள்…………
9.அருஞ்சொற்பொருள்:

## 1. முன்னுரை:

கடவுளின் அழைப்பை ஏற்று அருட்தந்தை ஜாண் போனாலும் அன்னை மரிய ரபோல்சும் மற்றும் சில ஆண்களும் பெண்களும் தங்கள் சொந்த ஊரை விட்டு (ஸ்பெயின் நாடு) சரோகோஸா நகரை 28/12/1804- ல் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கருணை மாதா மருத்துவமனையில் மேற்கொள்ளவிருக்கும் பணியினை மிகுந்த அன்போடும் அாப்பணிப்போடும் செயலாற்ற தூண் மாதா பாதம் சமர்ப்பித்து ஜெபம் செய்தார்கள். (சாசன எண் 2) இதுதான் புனித அன்னாள் பிறரன்பு சபையின் தோற்றம். இங்குதான் புனித அன்னாள் குடும்பம் தோன்றுவதற்கான விதையும் விதைக்கப்பட்டது.

கருணை மாதா மருத்துவமனையில் கால போக்கில் அருட்சகோதரிகளும் பொது மக்களும் இணைந்து பணிகளை பகிர்ந்து செய்தார்கள் இந்த அன்பு பணி பகிர்வே அருள் குடும்பம தொடங்குவதற்கு மூலக்காரணம்.

200 வருடங்களாக வித்தியாசமான சூழ்நிலை கலாச்சாரங்களின் மத்தியில் பல தேசங்களில் உள்ள அருட்சகோதரிகளும் பொது நிலையினரும் இணைந்து ஒரு குடும்பமாக ஒரே அருட் கொடையை பெற்றுள்ளனா்: வையக அன்பை உபசரிப்பில் வெளிப்படுத்துதல் என்ற கொடை பகிா்வு. இப்பகிர்வே அருட்சகோதரிகளையும் பொதுநிலையினரையும் வளப்படுத்தி நிறைவு செய்கிறது.

ஒவ்வொருடைய அழைப்பும் வித்தியாச மானது. தனித்தன்மையும், மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியது. இதுவே இறையாட்சியை கட்டியெழுப்பும் தன்மையும் உடையது.

புனித அன்னாள் பிறரன்பு சபை காலத்தின் மாற்றத்திற்கேற்ப முதன் முறையாக 2007-ம் ஆண்டு 26-வது சபையின் பொது அமா்வில் புதிய அத்தியாயத்தை தொடங்கியது. அதுதான் பொதுநிலையினரோடு அருட்சகோதரிகள் இணைந்து பணிபுரிவது.

**புனித அன்னாள் குடும்பம்:** "அன்னை மரிய ரபோல்ஸ், தந்தை ஜாண்போனாலின் அருட்கொடையை அருட்சகோதரிகளும் பொதுநிலையினரும் பகிர்தலே புனித அன்னாள் குடும்பம்."

2010 – ல் 27-வது சபையின் பொது அமர்வில் புனித அன்னாள் குடும்ப சட்டத்தில் குறிப்பிட்டிருப்பது "நாம் தூய ஆவியிடமிருந்து அருட்கொடையை பெற்றுக்கொண்டோம் என உணர்கிறோம், இது பிறருக்கும் வெவ்வேறான முறையில் கொடுக்கப்பட்டுள்ளது, அவர்களும் சபையோடு இணைந்து புனித அன்னாள் குடும்பத்தை உருவாக்குகின்றனர்".

மகிழ்ச்சிக்குரிய செய்தி என்னவென்றால்: பரிசுத்த ஆவியானவரே சபையையும் அதனோடு தொடர் புடைய பொது நிலையினரையும் தத்தம் அழைத் தலின் பெருமையையும், சிறப்பையும், தனித் தன்மையையும் உணர்ந்து அருட்குடும்பத்தோடு இணைந்து அர்ப்பணத்தோடு வாழ்வதற்குரிய ஆக்கப்பூர்வமான ஊக்கத்தை அளிக்கின்றார்.

## 2. அடித்தளம்:

*"நீங்கள் கடவுளுடைய பல்வகை அருள்கொடைகளின் சீரிய பொறுப்பாளர்கள். எனவே உங்களுள் ஒவ்வொ ருவரும் தாம் பெற்றுக் கொண்ட அருள்கொடையைப் பயன்படுத்தி, ஒருவருக்கொருவர் பணிபுரியுங்கள்."*
*(1 பேதுரு 4: 10)*

இயேசுவை பின்பற்றி சபையை நிறுவியவர்களும் பரிசுத்த ஆவியின் உந்துதலால், அக்காலத்தில் வாழ்ந்த ஏழைகளுக்கு, குறிப்பாக தேவையில் உள்ளவர்களுக்கு நற்செய்தி ஆனார்கள். அவர் களைப் பின்பற்றி நாமும் இறைவனின் இரக்க முகத்தை வித்தியாசமான சூழ்நிலைக்கு ஏற்றவாறு பிரதிபலிக்கவேண்டும். அருட்கொடையை காலத் திற்கும், தேவைக்கும் ஏற்றவாறு உயிரோட்ட முள்ளதாக மாற்றுவது நம் அனைவரின் கடமை.

**உபசரிப்பு:** அருட்கொடைகளின் அடித்தளம். இந்த அடித்தளமானது நம்மை முதலில் அன்பு செய்து தனது ஒரே பேறான மகனை உலகிற்கு அளித்து வெளிப்படுத்திய கடவுளின் உபசரிப்பின் பிரதிபலிப்பு. இயேசு தந்தையோடு ஒன்றித்திருந்து

மீட்பின் திட்டத்தை கடவுளின் அன்பாகவும், இரக்கமாகவும் வெளிப்படுத்தினார்.

அடிப்படை என்னவென்றால் நாம் கடவுளிட மிருந்து பெற்ற அன்பை பிறர் அன்பாக பிரதி பலிப்பது ஆகும். சபை நிறுவனர்களும், முதல் அருட்சகோதரிகளும் கடவுளின் அன்பை பிரதி பலித்து அனைவரையும், சகோதர உணர்வுடன் இறை அன்பிற்குள் ஒரே குடும்பமாக இணைக்க நினைத்தார்கள். அதில் யாரும் விதிவிலக்கல்ல.

புனித அன்னாள் குடும்பமானது இறை குழந்தைகள் சமூகம். இயேசுவைப் போல் வையக அன்பை உபசரிப்பாக பிரதிபலித்து பணி வாழ்வு மூலம் மனித நேயத்தோடு செயலாற்றும் இறைமக்கள் சமூகம்.

அாப்பணவாழ்வு ஒரு புதிய கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இதில் அருட்பொழிவால் நிரப்பப்பட்ட அனைவரும் அருட்கொடைகளால் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனா். இந்த கட்டமைப்பே அருட்குடும்பம். பல நிறுவனங்கள் தங்களது அருட்கொடைகளை பொது மக்களுடன் பகிர்ந்து கொள்ள முடிவெடுத்தன. “புதிய அதிகாரம், வளமான நம்பிக்கை துறவறத்திற்கும் பொது நிலையினருக்கும் உள்ள உறவில் புதிய சரித்திரம் படைத்திருக்கின்றது. ஒன்றிணைப்பு பரிசுத்த ஆவியின் கொடை. இது பாராட்ட கூடிய அருட்கொடை, இதை நன்றியுணர்வோடு ஏற்று அர்ப்பணத்தோடும், கடமை உணர்வோடும் வாழ அழைக்கப்படுகிறோம்.

### 3. புனித அன்னாள் குடும்ப வரையறை:

வையக அன்பை உபசரிப்பில் பகிர்ந்து கொள்ளும் அனைவரும் புனித அன்னாள் குடும்ப அங்கத்தினர். அங்கத்தினர் ஒவ்வொருவரும் சிறப்பு அழைப்பிற்கு ஏற்ப தங்கள் தனித்தன் மையோடும், அன்னை மரிய ரபோல்ஸ், தந்தை ஜான் போனாலின் ஆன்மீகத்தை ஏற்றுக்கொண்டு இறையன்பிற்கு சான்று பகிர்பவர்கள்.

வெவ்வேறான வயது, இனம், கலாச்சாரம், சமயம், மொழி, சாதி முதலியவற்றை கடந்து தாங்களாகவே முன் வந்து குடும்பத்தில் சேர்ந்த பல அங்கத்தினரை கொண்ட ஒரு விரிவான குடும்பம். குடும்ப உறுப்பினர்கள் சபையோடு இணைந்து மற்றும் பல்வேறு முனைப்பில்

கீழக்காணும் ஜெபம், சகோதரத்துவம், பயிற்சி மற்றும் அர்ப்பணிப்பு என்ற நான்கு மிக முக்கிய அடித்தளங்களில் தொடர்ந்து பங்கேற்கிறார்கள்.

### 4. தனித்துவ பண்புகள்:

புனித அன்னாள் குடும்ப உறுப்பினர்கள் தனித்தன்மையின் குணாதிசயங்களை தங்களது வாழ்வு மூலம் வெளிப்படுத்திக் கொண்டே இருப்பார்கள்:

அ) நசரேத்து ஊர் இயேசுவால் அவரது படிப்பினையால் ஈர்க்கப்பட்டு மனிதாபிமானமும் சகோதரத்துவமும் உள்ள உலகத்தை கட்டி எழுப்புவார்கள்.

ஆ) வையக அன்பால் வளம்பெற்று ஏழைகளுக்கும் தேவையில் உள்ளவர்களுக்கும் தங்களுடைய உபசரிப்பால் சேவை செய்வதில் தங்களது உயிரையும் பொருட்படுத்தமாட்டார்கள்.

இ) இறைவார்த்தையால், ஜெபத்தால் ஊக்கம் பெறுவார்கள்.

ஈ) இவர்கள் சேவையில் உபசரிப்பு, எளிமை, தாழ்ச்சி, மகிழ்வு, பொறுப்பு, கடமை வெளிப்படும்.

உ) இவர்களுடைய அர்ப்பணிப்பில் “அதீத அன்பு, மிக்க கரிசனை, தனி அக்கரை வெளிப்படும்.

ஊ) கடமையுணர்வோடும், இரக்கத்தோடும் பணிபுரிவார்கள்.

எ) ஏழை எளியோர்க்கு உதவுகையில் அவர்களுடைய மனித மாண்பை கருத்தில் கொண்டு வாழ்க்கை நிலையை உயர்த்த உதவுவார்கள்.

ஏ) ஒற்றுமையோடு இணைந்துபணி புரிவார்கள்.

ஐ) ஒன்றித்து சகோதர உணர்வோடு குடும்பமாக செயல்படுவார்கள்.

ஒ) மனிதத்தன்மை, ஆன்மீகம், அருள்வாழ்வு இவற்றில் பயிற்சி பெற விரும்புவார்கள்.

ஓ) அருள்வாழ்வு குடும்பத்தில், தங்களின் தனித்தன்மைக்கும் அழைத்தலுக்கும் ஏற்ற வாறு ஆன்மீக வாழ்வு வாழ்வார்கள்.

### 5) உறுப்பினர் பண்புகள்:

புனித அன்னாள் குடும்ப உறுப்பினர் ஆவதற்கு அடிப்படை தன்மைகள்:

அ) தன்னலம் இன்றி பொதுநலம் கருதுதல்.

- புனித அன்னாள் குடும்ப உறுப்பினர்கள் ஏதாவது ஒரு குடும்பத்தில் சேர்ந்து செயல்படுபவர்களாக இருக்க வேண்டும்.
- அன்னாள் குடும்பத்தில் செயலாற்றும் சிறுவர்கள் கால போக்கில் தாங்களாக முன்வந்து முழு அங்கத்தினராக மாறும் வரை தொடர்ந்து பணி ஆற்றுவார்கள்.

ஆ) உலகமெங்கும் பரவி உள்ள குடும்ப அங்கத்தினரோடு சகோதரத்துவ மனப்பாங்கோடு செயல்பட அர்ப்பணித்து, சபையினுடைய அருள் வாழ்வு மற்றும் பணிவாழ்வை பகிர்ந்து கொள்ள முனைவது.

இ) ஏதாவது ஒரு குடும்ப அமைப்போடு இணைந்து செயலாற்றுவது.

ஈ) உணர்வு பூர்வமாகவும், ஆக்கப்பூர்வ மாகவும் குடும்பத்தோடு தொடர்பு கொண்டிருத்தல்.

உ) படிப்படியாக குழுமத்தின் தனித் தன்மை பண்புகளை தனதாக்கிக் கொள்ளல்.

**6. பங்கேற்கும் முறைகள்:**

குடும்ப உறுப்பினர்கள் ஏற்கனவே கூறிய குடும்பத்தின் நான்கு தூண்களாகிய

- ஜெப வாழ்வு
- பயிற்சி
- சகோதரத்துவம்
- அர்ப்பணிப்பு

இவற்றில் இணைந்து பணி செய்வார்கள்.

**ஜெபவாழ்வு:**

- இறைவார்த்தையில் ஒன்றி வாழ்தல்.
- தியானம், உள்ளிருப்பு தியானம் இவற்றில் பங்கேற்றல்.
- அருட்சாதனங்கள் மற்றும் வழிபாடுகளில் பங்கேற்றல்: திருப்பலி, நற்கருணை ஆராதனை, நற்கருணை சந்திப்பு.
- திருச்சபையின் சிறப்பு கால வழிபாடுகளில் பங்கேற்றல் : திருவருகைக்காலம், தவக் காலம், கிறிஸ்துமஸ், உயிர்ப்பு பெருவிழா.
- பல்சமய உரையாடல்.

**பயிற்சி:**

- ஆன்மீக, சபை கோட்பாடுகள், குடும்பகோட் பாடுகள், மனித நேயம், பணிவாழ்வின் செயலாற்றும் தன்மை, பல்சமய உரை யாடல்… போன்ற தலைப்புகளில் பயிற் சிகள் ஏற்பாடு செய்து முழுமையாக பங்கெடுத்தல்.
- பயிற்சிக்கு தேவையான கருத்துக்களை விரிவாக்கம் செய்தல்.
- எல்லா பயிற்சிகளையும் ஒருங்கிணைப்பு செய்தல்.

**சகோதரத்துவம்:**

- கூட்டங்களில் பங்கேற்றல்: தாங்கள் சார்ந்த வட்டார, மண்டல, மாநில, உலக அளவில்.
- சபை விழாக்கள்
- குடும்ப பொதுநிகழ்ச்சிகள்.
- சபை மற்றும் குடும்பம் ஏற்பாடு செய்யும் ஆன்மீக, தொண்டு, மனித நேய விழாக்கள், கூட்டங்கள், போட்டிகள் போன்றவற்றில் ஆக்க பூர்வமாக பங்கேற்றல்.

**அர்ப்பணிப்பு:**

- மறைபரப்பு பணி.
- தன்னார்வ தொண்டு.
- பொருளாதார மேம்பாட்டு கூட்டங்கள்.
- சமூக மேம்பாட்டு நிகழ்ச்சிகள்.
- வீடு சந்திப்பு.
- பெண்கள் முன்னேற்ற பணிகள்.
- சிறார் பயிற்சி.
- மருத்துவ முகாம்கள்.
- சமூகப் பணி.
- சிறைச்சாலை சந்திப்பு.
- அன்பிய எழுச்சி கூட்டங்கள்.
- பங்கு அடித்தள அமைப்புகள்.
- ஏழை எளியவர்களுக்கான மேம்பாட்டு பணிகள்.
- சமுதாய வளர்ச்சி பணிகள்.
- இயற்கையை பேணி வளப்படுத்துதல்.

நமது அன்றாட வாழ்க்கையில், நாம் வாழும் சூழ்நிலையில், நம் தகுதிக்கு ஏற்றவாறு சேவை

மனப்பான்மையோடு வாழ்வதும் பங்கேற்பதுமே குடும்பத்துடைய முக்கிய அம்சமாகும்.

மனித வளர்ச்சி நிலைக்கேற்ப கீழ்காணும் ஏதாவதொரு குடும்ப நிலையோடு இணைந்து செயல்படல்: சிறார்நிலை, இளைஞர்கள், முதியோர்.

**7. அர்ப்பண முறைகள்:**

புனித அன்னாள் குடும்பத்தின் வெவ்வேறு அருள் வாழ்வு நிலையில் பங்கேற்பு கொள்ளலாம்.

- **புனித அன்னாள் குடும்ப - பொது நிலையினர்:** வையக அன்பை உபசரிப்பில் பகிர்ந்துகொள்ளுதலை தனதாக்கிக் கொண்ட பொது நிலையினர் இதில் இணைந்து செயலாற்றுவர்.
- **புனித அன்னாள் குடும்பம் - குழுக்கள்:** உபசரிப்பை அருட்கொடையாக பெற்றவர் கள் தனித்தன்மையோடு சிறப்பாக இணைந்து தங்களது குறிக்கோளை அடைய ஜெபம், பயிற்சி, சகோதரத்துவம் மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றில் தொடர்ந்து பங்கேற்று கொண்டிருப்பார்கள்.
- **புனித அன்னாள் குடும்ப – பொதுநிலை யினர் சமூகம்:** அருட்கொடையை உணர்ந்து தனித்தன் மையோடும், அக்கொடையை வாழ்வோடு தொடர்புபடுத்த அவ்வப்போது சேர்ந்தும், பகிர்ந்து கொள்வார்கள்.

மேற்குறிப்பிட்டவர்கள் :

- அருட்கொடையோடு தொடர்புடையவர்கள்.
- அருட்கொடை மற்றும் அதிகாரபூர்வமாகவும் தொடர்புடையவர்கள்.

- **புனித அன்னாள் பிறரன்பு சபை:** அருட்சகோதரிகள் தங்கள் சாசனங்களுடன்.

ஒருவரோடு ஒருவர் இணைந்து அருள் உணர்வோடு வாழும்போது புனித அன்னாள் குடும்பம் புதிய அருள் நிறை அர்ப்பணத்திற்கு அழைத்துச் செல்ல வாய்ப்பு உண்டு. இதை ஆராய்ந்து தெளிவு செய்யும் அதிகாரம் சபை தலைமைத் துவத்துக்கு உண்டு.

## 8. செயல்முறை:

### 8.1 அமைப்புகள்:

**அ) அடித்தள அமைப்புகள்:**

- ஆறுக்கு மேற்பட்ட அங்கத்தினர் உள்ள குழுவிற்கு ஒருங்கிணைப்பாளர்கள் - அருட் சகோதரி மற்றும் பொதுநிலையினர் (முடிந்தால்)
  - செயலர்
  - பொருளர்
- ஆறுக்கு குறைவாக உள்ள குழுவிற்கு ஒரு அருட்சகோதரி மட்டும்.
- அருட்சகோதரி இல்லாத பட்சத்தில் மாநில தலைவியால் பயிற்சி செய்யப்பட்ட ஒருவரை நியமனம் செய்யலாம்.

**ஆ) மாநில அளவில்:**

- மாநில தலைவி
- மாநில புனித அன்னாள் குடும்பம் பொறுப்பாளர்.
- அருட்சகோதரிகளும், பொதுநிலை யினரும் இணைந்த அமைப்பு: ஒருங்கிணைப்பாளர், செயலர், பொருளர்.

ஒவ்வொரு அமைப்பிலும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை பொறுத்து குழு அமைக் கப்படும்.(உலக, நாடு, மாநிலம், மண்டல, வட்டார அளவில், இதர பிரிவில் உள்ள பிரதிநிதிகள் பங்கெடுப்பார்கள்.)

**இ) தேசிய அளவில்:**

- புனித அன்னாள் குடும்ப சபை பொறுப்பாளர்.
- புனித அன்னாள் குடும்ப மாநில தலைவிகள்
- பொது நிலையை சேர்ந்த மாநில ஒருங்கிணைப்பாளர்கள்.

**ஈ) சபை அளவில்:**

- புனித அன்னாள சபை தலைவி.
- புனித அன்னாள் குடும்ப தலைவி.
- புனித அன்னாள் குடும்ப மாநில தலைவிகள்.

- பொது நிலையை சேர்ந்த மாநில ஒருங் கிணைப்பாளர்கள். (அவரவர் நாட்டில் சேவை செய்வது.)

### 8.2 பொறுப்புகளை பகிர்தல்:

குடும்ப பொறுப்புகளைக் கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ளலாம்.

**அ) ஒருங்கிணைப்பாளர்:** (அமைப்புக்குள், வெவ்வேறு நிலைகளில், உலக, மாநில, மண்டல, வட்டார)

- வருடாந்தர செயல் திட்டம் தீட்டுதல் குறிப்பாக நான்கு தூண்களாகிய: ஜெபம், பயிற்சி, அர்ப்பண வாழ்வு, சகோதரத்துவம்.
- குழுவும் சமூகமும் இணைந்து சமூகமாக செயல்பட பொறுப்பேற்றல்.
- செயல்திட்ட செயல்பாட்டை மேற்பார் வையிடுதல்.
- கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்.
- பொருளாதாரத்தை மேன்மை படுத்துதல், பொருளரோடு இணைந்து செயல் படுதல்.
- பிற ஒருங்கிணைப்பாளர் கூட்டத்தில் குழு சார்பில் பங்கேற்றல்.
- ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் பிற முக்கிய கூட்டங்களில் பங்கெடுத்து கருத்து பரிமாற்றம் செய்தல்.
- இணையதளங்களின் பயன்பாட்டை தெரிந்து அதன் முலம் தொடர்பு கொள்ளுதல்.(பல்வேறு நிலையினருடன்)
- குழு சார்பாக மண்டல, மாநில அளவில் தொடர்பு வைத்து கொள்ளுதல்.

**ஆ) செயலர்:**

- கூட்ட அறிக்கை சமர்பித்தல்.
- குடும்பம் சார்பாக குழுவுக்கு உள்ளும், வெளியிலும் தொடர்பு வைத்துக் கொள்ளுதல்.
- உறுப்பினர் குறிப்பேட்டை பேணிக் காத்தல், தொடர்பு வைத்தல்.

- வருடாந்தர நிகழ்ச்சிகளை குறித்தல், தொகுதி குறிப்பேட்டை பராமரித்தல், அறிக்கையாய் சமர்பித்தல்.

**இ)பொருளர்:**

- பொருளாதாரத்தை பேணி காத்தல், ஒருங்கி ணைப்பாளரோடு இணைந்து செயல்படுதல் (வருடாந்தர பொருளாதார நிலை மற்றும் கணக்குகளை ஒப்படைத்தல்)
- ஒருங்கிணைப்பாளரோடு இணைந்து பொரு ளாதாரத்தை மேன்மைப்படுத்துதல்.
- பொருளாதார உதவிகளை பெறுதல், அங்கத்தினருடைய பொருள் உதவியை மேன்மைபடுத்துதல், பொருளாதாரத்தை மேன்மைபடுத்துவதற்குரிய செயல்பாடுகளை செய்தல்.

மாநில அளவில் முடிவு செய்து வங்கி கணக்குகளை தொடங்குதல், (இணை-கணக்கு முறையில் செயல்படுதல்).

பொருளாளருடைய பதவி காலம் மூன்று வருடம். மீண்டும் ஒருமுறை தேர்ந்து எடுக்கலாம்.

சிறப்பு பணிகளுக்கு தனி குழு அமைக்கப் பட்டு செயல்படுத்தப்படும். (வரவு செலவுகளை இந்த சிறப்பு குழு செயல்படுத்தி பொது அமர்வில் ஒப்படைக்கும்)

**8.3 செயல்படும் முறை:**

புனித அன்னாள் குடும்ப உறுப்பினர் தங்கள் தனி அழைப்புக்கு ஏற்றப்படி:

- குழு, அமைப்போடு ஒன்றிணைந்து செயல்படல்.
- குழு, அமைப்போடு ஒன்றிணைந்து பணி புரிவதற்கு முன்னால் குடும்பத்தை பற்றி தெளிந்த பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.
- கூட்டங்கள், கொண்டாட்டங்கள், பயிற் சிகள், கருத்தரங்குகள், ஜெபம், போன்ற வற்றில் பங்கேற்றிருக்க வேண்டும்.

- புனித அன்னாள் குடும்பத்தோடு அதன் மேன்மைக்கும், வளர்ச்சிக்கும் செயல்படு பவரே குடும்பத்தினுடைய தனி பொறுப்பு களில் பங்கேற்க முடியும்.
- பொது மற்றும் மாநில சபை கூட்டங் களில் பங்கேற்க சபை சட்ட திட்டங்கள் 119 மற்றும் 140 – ல் (பொது நிலை யினர்) குறிப்பிடப்பட்டுள்ளது.
- பிற மண்டல, மாநில குழுக்களோடு ஒருங்கிணைந்து பணிபுரிய வேண்டும்.
- புதிய தேவைகளை தெரிந்து திறந்த உள்ளத்தோடு ஏழ்மையை ஒழிக்க மனப்பக்குவம் பெற்றிருக்க வேண்டும்.
- இயற்கையை பேணி காக்கும் வாழ்க்கை முறை, இயற்கை வளங்களை பயன் படுத்தும் பக்குவம், பூமித்தாயை கரி சனையோடு நடத்தும் தன்மை தேவை.
-

### 8.4 தொடர்பு முறைகள்:

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு முறையில் நாம் தொடர்பு கொள்ளலாம்.

- தனிநபர் சந்திப்பு.
- குழு கூட்டம்.
- சுற்று மடல்கள்.
- மாநில மற்றும் சபை அளவில் கூட்டங் களில் பங்கேற்றல். (நேர்முகமாகவும், தொலை தொடர்பு - மூலமாக)
- அறிவிப்பு மடல்.
- மாநில, மண்டல கூட்டங்கள்.
- குடும்ப இணையத்தளங்கள்.
- சபை இணையத்தளங்கள்.

## 9. அருஞ்சொற்பொருள்:

- **பிறரன்பு** : அருள் அன்பு. இறையன்பில் பங் கேற்பு. புனித அன்னாள் சபையின் தொடக் கம் இதுதான். வாழ்வின் அடித்தளம், தனிச் சிறப்பு, பணி வாழ்வின் நோக்கம், இதை நோக்கியே பயணம் தொடர்கின்றனர்.
- **அருட்கொடை** : இறைவனிடமிருந்து பெற்ற தனிப்பட்ட அருட்கொடை, இறையரசை பரப்ப கொடுக்கப்பட்டது.

- **அர்ப்பணம்** : தானாக முன் வந்து பிறருக்கு நன்மை செய்ய ஏற்றுக்கொண்ட பொறுப்பு.
- **சகோதரத்துவ கூட்டு வாழ்வு** : நிலையான புனித அன்னாள் கூட்டு குடும்பம், தங்கள் அழைப்பின் பொறுப்பை ஏற்று தனித்தன் மையோடு பொது அமைப்பில் பங்கேற்றல்.
- **சாசனங்கள்** : கிறிஸ்து இயேசுவை பின்பற்ற சபையினுடைய உயர் சட்ட திட்டங்கள், சபை அருட்கொடை மற்றும் வாழ்வு முறையைப்பற்றிய தொகுப்பு.
- **பயிற்சி** : சபையை பற்றிய போதிய அறிவு திறன் பெற, பயிற்சி பெற்று வாழ்க்கை பண்புகளில் படிப்படியாக அனுபவம் பெறல்.
- **சபை பொது அமர்வு** : உலகமெங்கும் உள்ள சபை பிரதிநிதிகளின் கூட்டம். சபை யின் உயர்மட்ட குழு. சகோதரத்துவத் தோடு சபைக்கு தனி முடிவுகள் எடுக்கும் அதிகாரம் பெற்றது. பொதுவாக 6-வருடங் களுக்கு ஒரு முறை, சிறப்பு கூட்டம் (சபை சிறப்பு அம்சங்கள் மற்றும் உடனடியாக முடிவு எடுக்கக்கூடியவற்றை விவாதிக்க 3 – வருடங்களுக்கு ஒரு முறை). சில அமர்வுகளில் புனித அன்னாள் குடும்ப பிரதி நிதிகள் பங்கு பெறுவார்கள்.
- **அடித்தளம்** : அஸ்திவாரமாக அமைந்து மேல்வளர்ச்சிக்கு மூல காரணமாவது.
- **தியாகம்** : அன்றாட வாழ்வின் பணிகளை முடிந்த அளவு மிக சிறப்பாகவும், அக்கரை யோடும் செய்ய முயற்சிப்பது.
- **உபசரிப்பு** : கடவுளின் கொடை, பிறரை தன்னலமின்றி ஏற்று, உபசரித்து பணி செய்வது "அதீத அன்போடும், மிகக் கரிசனையோடும்,தனி அக்கரையோடும் ஏற்றுக்கொள்ள தூண்டுவது.
- **தனித்துவம்** : தனிமனிதன், குழுவினுடைய தனித்தன்மையை வெளிப்படுத்தும் சிறப்பு அம்சம்.
- **ஜாண் போனால் தொண்டு நிறுவனம்** : புனித அன்னாள் பிறரன்பு சபையோடு தொடர்புடைய தன்னார்வ தொண்டு நிறுவனம்.

- **பொது நிலையினர்** : துறவறத்தார் அல்லாத திருச்சபையின் உறுப்பினர்கள். தங்களது வாழ்வாலும் பணியாலும் திருச்சபையின் புனிதத்தன்மையில் பங்கெடுத்து வளப் படுத்துபவர்கள்.
- **மருத்துவ முகாம், சேவை** : தன்னார்வ சேவைக்காக கிராமம், குக்கிராமங்களில் உதவி செய்ய முன்வரும் மருத்துவ குழு.
- **மறைபரப்பு பணி** : புனித அன்னாள் குழு மத்தினர் தாங்கள் பெற்ற அருட்கொடையை அர்ப்பண வாழ்வாலும் வார்த்தையாலும், பிறருக்கு பரப்புவது.
- **மறைபரப்பு முகாம்** : புனித அன்னாள் குடும்பத்தினரால் கிராமங்களில் திருச்சபை யின் சிறப்பு கால நிகழ்வுகளை செயல் படுத்துதல்
- **புதிய ஏழ்மை** : புதிதாக தோன்றும் தேவை கள், அறிவியல் கண்டுபிடிப்பால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள், சவால்கள், உலகமய மாக்குதல், சமூக ஏற்ற தாழ்வு, அரசியல் கலாச்சார சிதறல்கள், மதவெறித் தன்மை.
- **மேய்ப்பு பணிகள்** : திருச்சபையின் முப்பெரும் பணிகளாகிய திருவழிபாடு, இறைவாக்கு உரைத்தல் மற்றும் பணி வாழ்வு.
- **ஏழைகள்** :கீழக்காணும் ஏதாவது ஒரு முறையில் பின் தங்கியவர்கள்: அறிவுத் திறன், பொருளாதாரம், சமுதாய நிலை, உடல் நலக்குறைவு, மாற்று திறனாளி, கைவிடப்பட்டோர், கைம்பெண்கள்...
- **மாநிலம்** : சபை பரவியுள்ள இடங்களை மண்டலமாக செயல்படும் தன்மை.
- **மண்டல பொது அமர்வு** : மண்டல பிரதி நிதிகளின் கூட்ட அமர்வு. மண்டல தலை வியை தேர்ந்தெடுப்பதற்காகவோ, மாநில மற்றும் சபையின் கருத்து பரிமாற்றங்கள் மற்றும் சபையின் சிறப்பு கருத்து களை ஆழப்படுத்துதல், சில அமர்வுகளில் புனித அன்னாள் குடும்ப அங்கத்தினரும் பங்கேற்கலாம்.
- **பணி பகிர்வு** : அருட்சகோதரிகளும், பொது நிலையினரும் தங்கள் தனித்தன்

மைக்கு ஏற்றவாறு பணிகளை பகிர்ந்து கொள்ளுதல்.

- **ஆன்மீகம்** : தனி நபர், குழுவின் ஆன்மீ கத்தை வளப்படுத்தும் குறிக்கோள்கள், பண்புகள்.
- **பணி** : பணி வாழ்வில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயலும், பணியும், வேலையும், சேவையும்.
- **அழைப்பு** : இறைவனுடைய தனிப்பட்ட அழைப்பு. குறிப்பிட்ட வாழ்க்கை நிலையை தேர்ந்தெடுப்பதற்கு.